இத் திட்டத் தகவல் பத்திரம் ( PDS) அதன் 25 ஜுன் 2014 திகதியிடப்பட்ட ஆங்கிலப் பத்திரத்தின் அடிப்படையில் மொழிபெயர்க்கப்பட்டது.

ADB

# திட்டத் தகவல் பத்திரம்

திட்டத் தகவல் பத்திரம் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கமான தகவலை உள்ளடக்கியுள்ளது: PDS இன் பணியானது இயங்கும் நிலையில் காணப்படுகிறது, சில தகவல்கள் ஆரம்பப் பதிப்பில் உள்ளடக்கப்படுவதில்லை ஆனால் அது கிடைக்கத்தக்க நிலையை அடையும் போது சேர்த்துக்கொள்ளப்படும். உத்தேச கருத்திட்டங்கள் பற்றிய தகவலானது தற்காலிகமானதும் பிரேரிக்கப்பட்டதுமாகும்.

| | |
|---|---|
| **PDS உருவாக்கப்பட்ட திகதி** | – |
| **PDS புதுப்பிக்கப்படுத்தப்பட்ட திகதி** | 14 ஏப்ரல் 2014 |

| | |
|---|---|
| **திட்டப் பெயர்** | நீர் வளங்கள் அபிவிருத்தி முதலீட்டுத் திட்டம் |
| **நாடு** | **இலங்கை** |
| **திட்ட/நிகழ்ச்சித்திட்ட இலக்கம்** | 47381-001 |
| **இயல்பு** | முன் மொழியப்பட்டது |
| **பூகோளவியல் அமைவிடம்** | – |

ஏதேனும் நாடொன்றின் நிகழ்ச்சித்திட்டம் அல்லது மூலோபாயத்தை உருவாக்குதல், ஏதேனும் ஒரு திட்டத்திற்கு நிதியளித்தல், அல்லது பதவியை உருவாக்குதல் அல்லது இந்த ஆவணத்தில் ஒரு குறிப்பிட்ட ஆட்சிபரப்பு அல்லது பூகோளவியல் பிரதேசத்தை மேற்கோள் காட்டி, ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஒரு ஆட்சிப்பரப்பின் அல்லது பிரதேசத்தின் சட்டம் அல்லது ஏனைய நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை உத்தேசிக்காது.

| | |
|---|---|
| **பிரிவு மற்றும் /அல்லது உப பிரிவு வகைப்படுத்தல்** | பல் துறை/பல் துறை |
| **பொருள்சார் வகைப்படுத்தல்** | ஆற்றல் விருத்தி<br>பொருளாதார வளர்ச்சி<br>சூழல் நிகழ்தகவு<br>காலநிலை மாற்றம் |
| **பால்நிலை முக்கிய வகைகள்** | பால் நிலை வகைகள் இல்லை |

## நிதியளித்தல்

| உதவியின் வகை/ நடைமுறை | அங்கீகாரத்தின் இலக்கம் | நிதி வழங்கலின் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (US$000) |
|---|---|---|---|
| கடன் | – | சாதாரண மூலதன வளங்கள் | 350,000 |
| | – | சரி நிரப்புக் கூறு | 15,000 |
| **மொத்தம்** | | | **US$365,000** |

## பாதுகாப்பு வகைகள்

பாதுகாப்பு வகைகள் பற்றிய மேலதிகத் தகவலிற்கு, தயவு செய்து பின்வரும் இணையத்தளத்தினைப் பார்க்கவும் http://www.adb.org/site/safeguards/safeguard-categories

| | |
|---|---|
| சுற்றாடல் | — |
| தன்னிச்சையற்ற மீள் குடியேற்றம் | — |
| ஆதிவாசிகள் | — |

## சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகளின் சுருக்கம்

**சுற்றாடல் நோக்கங்கள்**

சுற்றாடலிற்காக KMTC மற்றும் UEC பிரிவு A ஆக ஒரு இணைக்கப்பட்ட சூழல் தாக்க மதிப்பீடு (EIA) தயாரிக்கப் படுகின்றது; NWPC பிரிவு A ஆவதுடன் அதற்கெனத் தனியான EIA தயாரிக்கப்படுகின்றது; MLCBR பிரிவு B ஆக ஓர் ஆரம்ப சூழல் பரிசோதனை தயாரிக்கப் படுகின்றது.

**தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம்.**

தன்னிச்கையற்ற மீள்குடியேற்றமானது முதலீட்டுத் திட்டத்தில் பிரிவு A ஆகும். பாதிக்கப்பட்டோரின் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் MFF இற்கான பொருத்தமான பாதுகாப்பு சட்டகம் மற்றும் ஒவ்வோர் பகுதி நிதிக்கான திட்டங்கள் உருவாக்கப்படும். MFF இனையும், திட்டம் 1 இனையும் அங்கீகரிக்க முன், மதிப்பீடுகள் முடிவிற்குக் கொண்டு வரப்படும்.

**ஆதிவாசிகள்**

செயற்குழுவினர் செயற்படுத்திய ஆரம்ப வேலைகள் மற்றும் EA இனால் அமர்த்தப் பட்ட ஆலோசனைச் சேவையாளர்களால் ஏற்கெனவே திட்டப் பிரதேசங்களில் நடாத்திய சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு திட்டப் பிரதேசங்களில் எந்தவொரு ஆதிவாசிகளின் சமூகக் குடியிருப்புக்களையும் இனங் காணவில்லை.

## பங்குதாரர் தொடர்பாடல், பங்களிப்பு மற்றும் ஆலோசனை

**திட்ட வடிவமைப்பின் போது**

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, திட்டம் செயற்படுத்தப்படும் மாகாணங்களில் அமைந்திருக்கும் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை, செயற்படுத்தப்படும் பிரதேசங்களில் முடிவுப் பாவனையாளராக உள்ள நீர்ப்பாசன நீர்ப் பாவனையாளரும் பயன்பெறுநர்களுமான விவசாயிகள், மற்றும் சகல MFF இல் உள்ள திட்டம் மூலம் பாதிக்கப்பட்டதும் நீர் மாற்றும் புதிய கால்வாய்கள் பொருத்தமாகச் செய்வதற்கு மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ள கிட்டத்தட்ட 194 குடும்பங்கள் ஆகியோர் இத்திட்டத்தின் முக்கிய பங்குதாரர்கள் ஆவர். திட்ட வடிவமைப்பினிற்கான பொறுப்பு MIWRM இனதாகும். மீள்குடியேற்றத் திட்டமிடல் பயிற்சியின் மூலமாக திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு அவர்களும் திட்டத்தில் உள்வாங்கப்படுவார்கள்.

**திட்ட அமுலாக்கலின் போது**

முக்கிய பங்காளர்களான நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபை ஆகியவை திட்டத்தின் தொழில் நுட்ப வடிவமைப்பில் ஏற்கெனவே ஈடுபட்டு மக்கள் குடியிருப்புகளிற்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக் குறைந்த அளவில் இருக்கக் கூடியவாறும் மனிதர்கள் அத்துமீறி அபகரித்த யானைகளின் இயற்கையான இருப்பிடங்களைக் கூட்டுவதற்கும் தேவையான கவனமெடுத்ததுள்ளனர். திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் ஒதுக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட எல்லோரும் மீள் குடியேற்ற சட்டகம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டமிடல் பயிற்சி உருவமைத்தலிற்கு அமைய திட்ட வடிவமைப்பில் பங்களிப்பர்.

## விபரம்

நீர் வளங்கள் அபிவிருத்தி முதலீட்டுத் திட்டம் மகாவலி அபிவிருத்தித் திட்ட(MDP)த்தின் கீழ் முடிவடையாது இருக்கும் நீர் கொண்டு செல்லுதற்கான முதலீடுகளை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு உதவும். MDP இனை முழுமையாக நிறைவேற்றுதல் அரசாங்கத்தின் முக்கியமான முன்னுரிமையாவதுடன் கிடைக்கப்பெறும் நீரினை நீர்ப்பாசனம், குடிநீர் மற்றும் வியாபார நோக்கங்களிற்காக இலங்கையின் வடக்கு உலர் வலயத்திற்கு அனுப்புவதன் மூலம் மகாவலி நதிப் பள்ளத்தாக்கு நீர் வளங்களின் உற்பத்தித் திறனை மிகப் பெரிய அளவில் பெருக்கும். இது உள்ளூர் மற்றும் தேசிய பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும். இம் மூலதனத் திட்டம் பல்தொகுதி நிதியளிப்பு வசதி (MFF) முறைமையைப் பின்பற்றுகின்றதுடன் முதல் மூன்று தொகுதிளையும் மற்றும் ஒட்டுமொத்தமான முதலீட்டுத் திட்டத்தினையும் தயாரிப்பதற்கு முடிவெடுக்க உதவும்.

## நாட்டின் பிராந்திய மூலோபாயத்திற்கான திட்ட அடிப்படைக் கோட்பாடு மற்றும் இணைப்பு நிலை

தேசிய மட்டத்தில் வருடாந்தம் 50,000 மில்லியன் கன மீற்றர்களை (MCM) வடிந்தோடும் மழை நீராகவும் வருடாந்த தலா மானியமாக (ACE) 2,500 கன மீற்றர்களையும் கொண்டுள்ள இலங்கை 1,700 கன மீற்றர்கள் என்று வரையறுக்கப்பட்ட நீர் நெருக்கடி வரம்பிற்கு மேலாக அபரிதமான நீர் வளங்கள் அணுகலைக் கொண்டுள்ளது. ஆனாலும் குறிப்பிடத்தக்க இடம் சார்ந்த மற்றும் காலம் சார்ந்த வேறுபாடுகள் உள்ளன; வடக்கு உலர் வலய ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் பங்களிப்பு டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி மாதங்கள் காலங்களில் மாத்திரம் இருப்பதுடன் தேசத்தின் மொத்த வடிந்தோடும் மழை நீர் கன அளவின் ஏறத்தாழ 11 வீதம் மாத்திரமே ஆகும். இது உள்ளூர் ACE 1,200 கன மீற்றர் அளவாக உள்ளதென்பது கடுமையான நீர் நெருக்கடியைக் குறிப்பதுடன் அதனைச் சூழ்ந்து ஒழுங்காக ஏற்படும் வரட்சியையும் காட்டுகின்றது. அதன் விளைவாக விவசாய உற்பத்தித் திறன் இலங்கையின் ஈரப் பிரதேசங்களிலும் பார்க்கப் பின் தங்கியுள்ளதுடன் 25 தொடக்கம் 30 வீதம் வரை குறைந்த நெல் விளைச்சலையும் பயிர்ச் செறிவுமாகமாகவும் உள்ளது. இந்த நெருக்கடி குடிநீர் மற்றும் வியாபார பாவனையாளர்களிற்கு கிடைக்கும் நீரின் மேல் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இது சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க தடைகளாக உள்ளதுடன் எதிர்காலத்தில் எதிர் பார்க்கும் மக்கள் தொகை வளர்ச்சியையும் காலநிலை மாற்றத்தையும் மோசமாக்கலாம். சரித்திர ரீதியாக இலங்கை பல சிறிய நீர்த் தேக்கங்களின் இணைப்பு முறையினையும் நீர் கொண்டு செல்லும் கால்வாய்களையும் உருவாக்கி இவ்வாறான இடைஞ்சல்களிற்கு முடிவு கண்டுள்ளது. 1960 களில் அரசாங்கம் MDP யின் கீழ் மகாவலி ஆறு மூலம் கிடைக்கும் நீர்வளங்களை இந்த முறைமைகளின் கீழ் பாரிய மாற்றும் கால்வாய்களையும் நீர்த்தேக்கங்களையும் பாவித்து நீரினை அதிகப்படுத்துவதற்கு முடிவெடுத்தது.

இலங்கையின் பரப்பளவில் 18 வீத பிரதேசத்தினை உள்ளடக்கிய மகாவலி ஆற்று நீர்த்தேக்கம் இலங்கையின் மிகப் பெரிய ஆறாவதுடன் நாட்டில் வடிந்தோடும் மொத்த மழை நீரின் 21 வீதத்தினையும் இது வழங்குகின்றது. MDP யின் நோக்கங்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலுள்ள மேலதிக நீரினை 365,000 ஹெக்ரயர்(ha) நீர்ப்பாசனத்திற்கு திருப்பி விடுதல் மூலம் உணவில் தன்னிறைவு அடைவது, காணிகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை காணி இல்லாதோருக்கு வழங்கல், மற்றும் நீர்ச்சக்தி வலு உற்பத்தி. 1970 இல் செயற்படத் தொடங்கி 2012 வரைக்கான இலக்காக 150,000 ha ஐ நீர்ப்பாசனம் செய்யப்பட்டுள்ளதாகும். கடந்த காலங்களில், அரசாங்கம் சமூக பொருளாதார மாற்றங்களிற்கும் தேசீய அபிவிருத்தி முன்னுரிமைகளிற்காக MDP கணக்கிடலைத் திருத்தியமைத்தது. நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் துறைக்கான அரசாங்கத்தின் தற்போதைய முன்னுரிமைகளின் கவனம் நீர்ப்பாசனத்திற்கு தேவையான அளவு நீர் வழங்கலை உறுதிப்படுத்தல்; முகாமைத்துவத்தினை மேம்படுத்தல், மேலும் கூடிக் கொண்டு செல்லும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தித்திறன் மற்றும் நீர்ப் பாவனை செயல்திறனைக் கூட்டுதல்; நீர் கிடைப்பதில் காலம் சார்ந்த வேறுபாடுகளினைக் குறைப்பதற்காக குறுக்கு நீர்த் தேக்கங்களைத் திசை திருப்புவதன் மூலம் கிடைக்கும் நீரினை உலர் வலயப் பிரதேசங்களிற்கு திருப்பி விடல், என்பனவாகும். இத் துறையின் முன்னுரிமை முதலீடுகளின் நோக்கம் முன்னேறும் பிரதேசங்களில் நீர் வளங்களின் அபிவிருத்தியை விரைவாக்கல், இன்னமும் செய்ய வேண்டியுள்ள MDP இனது வட மத்திய மாகாணத்தின் கால்வாய்த் திட்டம் (NCPCP) நிறைவுறுதலை வலியுறுத்தல்

இரு கட்ட வரிசை முறையில் NCPC செயற்படுத்தப்படும்; நான்கு முதலீட்டுத் திட்டங்களை கொண்டுள்ள முதலீட்டுத் திட்டம் கட்டம் 1 இல் செயற்படுத்தப் படும்: (i) மாற்றல் கால்வாய் (KMTC) 771MCM அளவிற்கு நீரை தற்போது

அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் களுகங்கை மற்றும் மொறகககந்த நீர்த் தேக்கங்களிற்கிடையில் கொண்டு செல்லும். நீரோட்ட நீர்ப்பாசனத்தையும் நீர் வழங்கல் திட்டங்களையும் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வர முன்பு, நீர்த் தேக்கங்கள் உள்ளூர் வடிந்தோடும் மழை நீரினையும் மற்றும் மகாவலி நதி நீரோட்ட திசை திருப்பல்களையும் தேக்கி வைத்துக் கொள்ளும். (ii) மேல் எலகெர கால்வாய் (UEC) மொரகககந்த நீர்த் தேக்கத்திலிருந்து வருடாந்தம் 974MCM நீரை வடக்கு நோக்கி 70 கிலோமீற்றர் கால்வாய் வழியாக, தற்போது நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் திட்டங்களிற்கு நீர் வழங்கிக் கொண்டிருக்கும் குருலுவேவா மற்றும் மண்ணக்கட்டிய நீர்த்தேக்கங்களிற்கு எடுத்துச் செல்லும். (iii) வட மேல் மாகாணக் கால்வாய் (NWPC) தம்புலு ஓயா நதியிலிருந்தும் நடைமுறையிலுள்ள நாலந்த நீர்த்தேக்கத்திலிருந்தும் வருடாந்தம் 130 MCM ஐ எடுத்துக் கொண்டு புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட 80 கிமீ கால்வாய் மூலமாக வடமேல் மாகாணம் முற்றிலும் அமைந்துள்ள புதிய மற்றும் நடைமுறையிலுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கும் நீர்த் தேக்கங்கள் செயற்படும் வண்ணம் கொண்டு செல்லப்படுகின்றது. (iv) மகாவலி நதியில் அமைந்திருக்கும் மகாவலி நீர் வலு வளாகத்தின் நீரோட்டக் கீழ்த்திசையில் மினிப்பே இடக் கரை மறுசீரமைப்பு (MLBCR) அமைந்துள்ளது. இத் திட்டம் (அ) நீரோட்ட மேற்திசைத் தேக்கத்தின் அணைக்கட்டின் மேல் 4 மீட்டர் உயர்த்துவதனால் உற்பத்தி உட்பிரவாகத்தினை ஒழுங்கு படுத்துவதுடன் (ஆ) தற்போதுள்ள விவசாயிகளிற்கு நம்பகமான சேவைகளினை வழங்குவதற்காக 76 கிமீ இடது கரைக் கால்வாயினை மீளமைப்பு செய்து நீர் மாற்றல் வசதியினை மேம்படுத்தல். NCPCP கட்டம் 2 இன் கீழ் (இந்த முதலீட்டுத் திட்டத்தின் கீழ் இல்லை) எதிர்கால முதலீடுகள்: (i) மகாவலி நதியிலிருந்து மேலதிக நீர் களுகங்கை நீர்த் தேக்கத்திற்கும் UEC க்கும் மாற்றுவதுடன்; (ii) வட மத்திய மாகாணக் கால்வாய் நிர்மாணித்தல். இவைகள் கட்டம் 1 முதலீடுகளைப் பாவித்து மேலதிக மகாவலி நீரினை வட மத்திய மற்றும் வட மாகாணங்களிற்கு கொண்டு செல்வதும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரங்களிற்கு குடிநீர் வழங்கலையும் இணைந்து நிறைவாக்கும். இரண்டு ஆலோசனைப் பொதிச் சேவைகளினால் முதலீட்டுத் திட்டம் மற்றைய முக்கிய துறைகளின் முன்னுரிமைகளிற்கு தீர்வளிக்கும். (i) நீர்ப் பாவனை முறை பயனுறுதியை (ISWUE) மேம்படுத்தல் மற்றும் (ii) நீர் வளங்கள் முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களிற்கு வலுவூட்டல். இம் முதலீட்டுத் திட்டத்தினால் இப்போதுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் 31,400 ஹெக்ரயரில் பயிர்ச் செறிவுகள் 130% இருந்து 180% வரை கூடுவதுடன் 2.8 தொன்/ஹக்ரயர் இலிருந்து 4.8 தொன்/ஹக்ரயர் வரை விளைச்சல் நெல் உற்பத்தி கிடைப்பதையும் உறுதி செய்யும்.

நீரோட்டத் திசையில் வாழும் சமூகங்கள் பாவிக்கும் அதிகரிக்கப்பட்ட தற்போதுள்ள ஓடையிணைப்பு முறைமைகளின் கீழ் திருப்பப்படும் வடிகால் நீரோட்டங்களினால் மேலதிகமான பயன்கள் கிடைக்கும். கட்டம் 2 முடிவிற்கு வந்த பின், முதலீட்டின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் நீர்ப்பாசனப் பிரதேசம் 84,400 ஹெக்ரயர் ஆகக் கூடும். குறைவான நீருடன் அதிக பெறுமதியான பயிர்களைச் விளைவிப்பதற்கு ISWUE பொதியின் கீழ் இனங்காணப்பட்ட வினைத் திறனுடனான நீர்ப் பாவனை முன்னெடுப்பு மூலம் பயிர்ச் செறிவுகள், விளைச்சல்கள், மற்றும் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் எனபன மேலும் அதிகரிக்கும். NCPCP கட்டம் 1 இன் கீழ் விவசாயத்திற்கல்லாத பாவனையாளர்களிற்கு 73.5MCM ஐ கொண்டு செல்வதுடன் கட்டம் 2 இன் கீழ் மேலும் 100MCM ஐ வடமாகாணத்திற்குக் கொண்டு செல்லும். இம் முதலீட்டுத் திட்டம் இலங்கைக்கான ADB யின் தேசப் பங்குடைமை உத்தி 2012-2016 நோக்கங்களுடன் முற்றாக இசைவுள்ளதாக உள்ளது; இது பொருளாதார வளர்ச்சி உட்பட உள் கட்டமைப்பு அபிவிருத்தி என்பவற்றைப் பேணுவதற்கான பிரதான முட்டுக்கட்டைகளைத் களைந்து பின்னடைந்த பிரதேசங்களிற்கான இணைப்பு மற்றும் சேவை வழங்கல் என்பவற்றை மேம்படுத்தற்கு அரசாங்கத்திற்கு உதவும். முதலீட்டுத் திட்டத்தின் பகுதி நிதி 1 ADB யின் 2014 தொடக்கம் 2016 வரைக்கான இலங்கை தேசச் செயற்பாடுகள் வியாபாரத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. இதுவும் ADB யின் 2011 தொடக்கம் 2020 வரைக்கான சகலருக்கும் நீர் என்ற கொள்கை மற்றும் நீர் செயற்பாட்டுத் திட்டத்துடன் இசைவாக உள்ளது. MFF முறையானது (i) நிதித் தேவைகளை அனுமதிப்பதுடன் அதற்கான முதலீடுகள் செயவதற்கான தயார் நிலை, (ii) சுரங்க முதலீடுகள் தயாரிப்பதற்கு தேவையான நேரம் ஓதுக்கிக் கொடுத்தல், (iii) திட்டங்களின் அமுலாக்கல் வரிசை முறைப்படுத்தலினால் உயர்ந்த அளவில் சாதகமாக்கல் மற்றும் (iV) முகம் கொடுக்கக் கூடிய உட்கவரும் மற்றும் நடைமுறைப்படுத்தும் அரசாங்கத்தின் ஆற்றல்கள் என்பவற்றை அடையச் செய்யும். முதலீட்டுத் திட்டம் MFF இன் பொருத்தமான கோட்பாடுகளின் தடை நீக்கும் மூலக் கூறுகளைக் கடைப் பிடிக்கின்றதுடன் அதனின் கொள்கைச் சட்டகம் மற்றும் மார்க்க வரைபடம் என்பன கடன் தயாரிப்பின் போது புதுப்பிக்கப்படும்.

## அபிவிருத்தியின் விளைவு

முன்னைய முரண்பாட்டு மற்றும் உலர் வலய பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான மேம்படுத்தப்பட்ட நீர் உற்பத்தித் திறன்.

## திட்டப் பயன்

| திட்டப் பயன் விபரம் | பிரதிபலனின் முன்னேற்றம் |
| --- | --- |
| வடக்கு உலர் வலயப் பிரதேசங்களில் விவசாயம் மற்றும் விவசாயமல்லாத தேவைகளிற்கான நீர் வளங்கள் உறுதி செய்யப்பட்டது | – |

## பிரதிபலன்கள் மற்றும் அமுலாக்கலின் முன்னேற்றம்

| திட்ட பெறுபேறுகளின் விபரம் | அமுலாக்கல் முன்னேற்றத்தின் நிலைமை (பெறுபேறுகள், செயற்பாடுகள், மற்றும் பிரச்சினைகள்) |
| --- | --- |
| 1 நீர் கொண்டு செல்வதற்கான உட்கட்டுமானம் விருத்தி செய்யப்பட்டது. 2. SIWRM மற்றும் ISEWP என்பவற்றிற்கான முறைமை விருத்தி செய்யப்பட்டது 3. செயற்படும் பல்ஒழுங்கு முதலீட்டு திட்ட முகாமைத்துவம் | – |
| **அபிவிருத்தி நோக்கங்களின் நிலை** | **பொருள் ரீதியான மாற்றங்கள்** |
| – | – |

## வியாபார வாய்ப்புகள்

**முதல் பட்டியல் திகதி** 3 ஏப்ரல் 2014

**ஆலோசனைச் சேவைகள்**

சகல ஆலோசனைச் சேவைகளும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழிகாட்டிகளின் படி செயற்படுத்தப்படும். முன் ஒப்பந்தம் மற்றும் சென்ற காலத்திற்கான நிதியீட்டல் தெரிந்தெடுக்கும் உரிமை பாவிக்கப்படும். PPTA யினைப் பாரமெடுப்பதற்காக தனிப்பட்ட ஆலோசனைச் சேவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**கொள்வனவு**

சகல கொள்வனவுச் செயற்பாடுகளும் ADB வழி காட்டிகளின்படி நடைபெறும்.

**கொள்வனவு மற்றும் ஆலோசனைஅறிவித்தல்கள்**

http://www.adb.org/projects/47381-001/business-opportunities

## நேர அட்டவணை

| | |
| --- | --- |
| **கோட்பாட்டு ஒத்திசைவு** | 2 ஏப்ரல் 2014 |
| **உண்மை ஆய்வு** | 05 செப்ரம்பர் 2014 தொடக்கம் 21 செப்ரம்பர் 2014 வரை |
| **முகாமைத்துவ மீளாய்வு கூட்டம்** | 3 டிசம்பர் 2014 |
| **அங்கீகாரம்** | – |
| **இறுதி மீளாய்வு பணி** | – |

## முக்கிய நிகழ்வுகள்

| அங்கீகார இலக்கம் | அங்கீகாரம் | கையொப்பம் | வினைத்திறன் | முடிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மூலம் | திருத்தப்பட்ட | உண்மையான |
| – | – | – | – | – | – | – |

## பயன்பாடு

| திகதி | அங்கீகார இலக்கம் | ADB (US$ ஆயிரம்) | ஏனையவை (US$ ஆயிரம்) | தேறிய சதவீதம் |
|---|---|---|---|---|
| **திரண்ட ஒப்பந்த வழங்கல்** | | | | |
| – | – | – | – | – |
| **திரண்ட பகிர்வுகள்** | | | | |
| – | – | – | – | – |

## உடன்படிக்கைகளின் நிலைமை

பின்வரும் வகைகளின் கீழ் உடன்படிக்கைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன: கணக்காய்வுகுட்படுத்தப்பட்ட கணக்குகள், நலப்பாதுகாப்புகள், சமூக பிரிவு, நிதி, பொருளாதாரம் மற்றும் ஏனையவை. பின்வரும் அளவீடுகளின் அடிப்படையில் உடன்படிக்கை இணக்கப்பாடு தரப்படுத்தப்படுகிறது: (i) திருப்தி – உச்ச அளவாக ஒரு விதிவிலக்கு அனுமதியுடன் இந்த பிரிவில் உள்ள அனைத்து உடன்படிக்கைகளும் இணங்கியுள்ளது, (ii) பகுதியளவு திருப்தி – உச்ச அளவாக இரு உடன்படிக்கைகள் பிரிவுடன் இணங்கவில்லை, (iii) அதிருப்தி – மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் இந்த பிரிவில் இணங்கவில்லை. 2011 பொதுசன தொடர்பாடல் கொள்கையின் படி, திட்ட நிதி கூற்றுக்களுக்கான உடன்படிக்கை இணக்கப்பாட்டு தரப்படுத்தலானது 2 ஏப்ரல் 2012 இற்கு பின்னரான திட்ட பேச்சுவார்த்தைக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும்.

| அங்கீகார இலக்கம் | வகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பிரிவு | சமூகம் | நிதி | பொருளாதாரம் | ஏனையவை | நலப்பாதுகாப்பு | திட்ட நிதி கூற்றுகள் |
| கடன் | – | – | – | – | – | – | – |

## தொடர்புகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட விபரங்கள்

| | |
|---|---|
| **பொறுப்பான ADB உத்தியோகத்தர்** | லான்ஸ் கோர் (LGORE@adb.org) |
| **பொறுப்பான ADB திணைக்களம்** | தெற்காசிய திணைக்களம் |
| **பொறுப்பான ADB பிரிவுகள்** | சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் விவசாயப் பிரிவு, SARD |
| **நிறைவேற்று முகவராண்மைகள்** | – |

## தொடர்புகள்

| | |
|---|---|
| **திட்ட இணையத்தளம்** | http://www.adb.org/projects/47381-001/main |
| **திட்ட ஆவணங்களின் பட்டியல்** | http://www.adb.org/projects/47381-001/documents |